திரு. நா. வீராசாமி : எனக்குக் கேள்வி கேட்பது எப்படி என்று திரு. கிருஷ்ணமூர்த்தி சொல்லவேண்டாம் அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டு பதில் அளிக்க வேண்டும். இதிலே முக்கியமான பிரச்னை என்னவென்றால், அறிக்கையில் சில குறிப்புகள் கொடுத்து இருக்கிறார்கள். அந்தக் குறிப்பில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், "வேஜ் கையிட்லேன்ஸ் கமிட்டி".

MR. DEPUTY SPEAKER : I have passed over to the next subject. உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. நா. வீராசாமி : 6 பக்கம் அறிக்கையைப் படித்து விட்டு, கேள்வி போட வேண்டும் என்றால், ஒரு கேள்வி தான் அனுமதி கொடுத்திர்கள். ரூல் 41-ன் கீழ் இது கொண்டு வரப்பட்டிருக்கிற ஒரு முக்கியமான விஷயம் ஆகும். இப்படிக் கேள்வி கேட்க அனுமதிக்காமல் செல்வது நியாயமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தப் பிரச்னையைவிட்டு, அடுத்த நிகழ்ச்சிக்குச் சென்றாகி விட்டது. மாண்புமிகு உறுப்பினர் கோருகிற விஷயங்களைப் பெறவேண்டு மென்றால், குறுகிய கால கேள்வி போடலாம். குறுகிய கால கேள்வி என்று வருகிறபோது, வருகின்ற நாட்களில் அமைச்சர் பதில் அளிப்பார்கள்.

7. 1975-76-ம் ஆண்டு நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு— தொடர்ச்சி

நிதிக்கோரிக்கை எண் 28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,00,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

[1975 ஏப்ரல் 5

THIRU K. P. GOPAL : Sir, to discuss about the necessity to reorganise the Town and Village Panchayats as viable units, I move—

'That the allotment of Rs. 29,00,09,000 underr Demand No. 28 — Community Development Projects, etc., be reduced by Rs. 100.'

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, வளர்ச்சித் திட்டங்களில் மக்களை இணைத்துச் செயல்படுத்த வழிகாண்பது பற்றி விவாதிக்க

"நிதிக் கோரிக்கை எண் 28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பகின்ற ரூ. 29,00,09,000-ல் ரூ. 100 குறைக்கப்பட வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, சமுதாய வளர்ச்சிப் பணிகள் விரைவாகவும், சீராகவும் நடைபெற துறையில் ஏற்படும் நீண்டகாலத் தாமதங்களை தவிர்ப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,00,09,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கிருஷ்ண ராயபுரம் ஒன்றியத்தில் உள்ள புனவாசிப்பட்டியில் சமுதாயக் கிணறு வெட்டும் பணியை விரைவுபடுத்தவேண்டும் என்பதை வலியுறுத்த—

"நிதிக் கோரிக்கை எண் 28, சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,00,09,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கோவில்பட்டி, தாலுக்கா போன்ற வறட்சிப் பகுதிகளில் அதிகமான குழாய்க் கிணறுகளைப் பாசன ஏற்பாட்டிற்காக அமைக்க விசேடத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சி திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,00,09,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

1975 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், கிராமப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு வேளாண்மையில் நல்ல ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்டுவதற்கும், இந்தத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்துவதன் மூலம், அந்த கிராம மக்கள், உழைக்கின்ற மக்கள் வளர்ச்சி அடையவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் 1958-லே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டு வருகிறபோது அதற்கான செலவினங்கள், அதற்கான வரவினங்கள்—1958-லே நிர்ணயித்து இருந்தாலும்—நாளடைவில் அது மிக வேகமாக வளர்ந்து, இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நல்ல வளர்ச்சியைப் பெற்று இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்வேன்.

கல்விக்காக 1958-லே 3.50 என்ற அளவிலே செலவினங்கள் ஒரு நபருக்கு வைத்து இருந்தாலும், 1975-76-லே இந்த ஆண்டிலே அது 13.50 என்ற அளவிலே உயர்த்தப்பட்டு இருக்கிறது. வருமானம் என்ற அளவிலே, உள்ளூர் மேல் வரியில் 50 பைசா என்று இருந்தது, இன்று 2.50 பைசா என்ற வகையிலே நாம் உயர்த்திக் கொள்வதற்கு அந்த மன்றங்களுக்கு அனுமதி கொடுத்து இருக்கிறோம். அதேபோல், வீட்டு வரி 30 பைசா என்று இருந்தது, 1975-76-லே 60 பைசா என்று உயர்ந்து இருக்கிறது. அதுபோல், மேல்வரி, இணைமானியம் 50 பைசா என்று இருந்தது. இப்போது 3.75 என்று உயர்வு பெற்று இருக்கிறது. இன்று ஊராட்சிகள், ஒன்றியங்கள் மக்களுக்கு செய்கிற எல்லாக் காரியங்களிலும், நம்முடைய மாநிலம் தான் முதன்மையாக இருக்கிற வகையில் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல 1958-ல் மேல்வரி இணை மானியம் ரூ. 0.50 ஆக இருந்தது. இப்பொழுது ரூ. 3.75 ஆகியுள்ளது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்டங்களுக்காக உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்ட மொத்த நிதி ரூ. 156 கோடி. இது 4-வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 330 கோடியாகவும் 5-ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 500 கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. தமிழகம் எந்த அளவிற்கு மிக வேகமாக முன்னேறி இருக்கிறது என்பதற்கு நான் காட்டிய புள்ளிவிவரங்கள் போதும் என்றே கருதுகிறேன். மகாத்மா காந்தி, சுதந்திரம் பெற்றதும், கிராம ராஜ்யம் ஏற்பட